முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 652**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.07.2021, திங்கட்கிழமை

1. கருணைவடிவே அரங்கா வாழ்க
கலியின் சிறந்த குருவே வாழ்க
பெருமைமிக்க தர்ம கூடம் அமைத்து
பேருலகை பசி பிணியிலிருந்து விரட்டும் குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
ஊழ் வென்ற மகா சக்தியுமாக
உலகை காக்கும் பெரும் சக்தியுமாக
3. ஆகவே என் சூட்சுமமாய் நிரம்பி இருக்கும்
அரங்கனே ஞான தேசிகனே உந்தனுக்கு
யுகமாற்றத்தின் மகா சக்தியையும் வரத்தையும்
உயர்வாக சுப்ரமணியர் யானும் வழங்கியுள்ளேன்
4. உள்ளபடி உன் தொண்டர்படைகளை பெருக்கி
உயர்வாக தர்மசேவை ஆற்றிக்கொண்டு
வல்லமைபட சுத்தசன்மார்க்க நெறியை
வழிமொழிந்து உலகமெங்கும் பரப்பிவர
5. வருகவே கலியுகம் மாறுமப்பா
வருகவே பேரிடர்கள் ஓடுமப்பா
தருகின்ற அரங்கன் உபதேசமும்
தருகின்ற அரங்கன் தர்மபலமும்
6. பலமான மக்கள் படையை உருவாக்கி
பாருலகை ஞான வழி நடத்தும்
சலனமற தீவினை மாந்தர்களையும்
சாற்றிட அகற்றி இந்த கலியுகத்தில்
7. சாதனையாளர்களை உருவாக்கி
சடாட்சர எந்தன் பலமாக
இனி வளமான ஞான பூமியாக
இந்த யுகம் வல்லமைபட ஞானயுகமாக மாற்றம் பெறும்
8. மாற்றம் தரவந்த மாதவசியே
மக்களை காக்க வந்த மகா யோகியே
ஆற்றலாக யாம் உமக்கு நிரம்பி இருக்க
அரங்கன் உன்னை தொட்டு வணங்கி வரும் மக்களுக்கு

9. மக்களுக்கு என்னருள் பரிபூரணம்
மக்களுக்கு மரணம் விலகி நிற்கும்
மக்களுக்கு மறுமை கூடிநிற்கும்
மக்களுக்கு ஞானி ஆகும் வாய்ப்பு கிட்டும்

10. வாய்ப்பு தந்தேன் உந்தன் வழி உலகோர்க்கு
வழிமொழிந்து உன் நாமஜெபம் போற்றி
மெய்ஞான வழி தேடி வருபவர் எல்லாம்
முருகன் என் அருள்பெற்று ஞானியாவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–